**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30.01.2020

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் விதை நாள் திருவிழா நடைபெற்றது

விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, விதை மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 29.01.2020 அன்று விதை நாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் 50 வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டனர். விதை மையம் மற்றும் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் விஞ்ஞானிகள் மற்றும் மாணவ, மாணவியர் விழாவில் கலந்து கொண்டு விழாவில் விதைத் தர மேம்பாடு, சான்று விதை உற்பத்தி, வீரிய ஒட்டு விதை உற்பத்தி குறித்த கருத்துக் காட்சிகள் மற்றும் செயல் விளக்கங்களை விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தனர்.

இவ்விழாவிற்கு முனைவர்.பெ.இரா.ரெங்கநாயகி, பேராசிரியர் மற்றும் தலைவர், விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை வரவேற்புரையையும் முனைவர்.க.கிருஷ்ணவேணி, பேராசிரியர் அவர்கள் அறிமுக உரையும் வழங்கினார்கள். விழாவில் திரு.பீ.ஆர்.நாராயணசுவாமி, தலைமை நிர்வாக அலுவலர், அக்ரோ பாரஸ்டிரி பாஃர்மர் புரடியூசர் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர் வாழ்த்துரை வழங்கினார்.

முனைவர்.சே.கீதா, இயக்குநர், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டு ஒவ்வொரு பயிரிலும் விதை உற்பத்திக்கு ஏற்ற நல்ல விளைச்சல் தரக்கூடிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிட்ட பயிர் இரகங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டுமென்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் விதை உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கூறி சிறப்புரை வழங்கினார்.

முனைவர்.செ.சுந்தரேஸ்வரன், இயக்குநர், விதை மையம் அவர்கள் தலைமையுரையாற்றி விவசாயிகளுக்கு விதை உற்பத்தி, விதைத் தர மேம்பாடு பற்றியும் எடுத்துரைத்தார். மேலும், விவசாயிகளே சிறந்த விதை உற்பத்தியாளர்களாக மாறவேண்டுமென்று கூறி விதை நாள் விழா சிறப்பு மலரை வெளியிட்டார். விவசாயிகள் விதை உற்பத்தியில் தங்களுக்குள்ள இடர்பாடுகளையும் அதற்குள்ள தீர்வுகளையும் விதை விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினர்.

இறுதியாக முனைவர். ஜெ.ரேணுகாதேவி, பேராசிரியர் நன்றி நவில, விழா இனிதே நிறைவுற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்